தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1969 மார்ச் 22

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Pensioners.

*398 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Ministe for Finance be pleased to state—

(*a*) whether the pensioners of Tamil Nadu have submitted any memorandum to the Hon. the Chief Minister ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) whether it is proposed to revise the scale of pension on the basis of cost of living index ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN :

(*a*) Yes, Sir.

(*b*) The details are as follows —

(i) to increase the rate of dearness allowance admissible to pensioners.

(ii) to grant free medical treatment to pensioners, and

(iii) to nominate a member of the Retired Officials Association as a member of Tamil Nadu Legislative Council.

(*c*) It is not proposed to revise the scale of pension on the basis of cost of living index.

THIRU K. VINAYAKAM : Did the Government concede any of their prayers in the list of their demands apart from the prayer for enhancement of pension ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : குறிப்பிட்ட கோரிக்கைகள் எதையும் பரிசீலனை செய்வதற்கில்லை என்று தான் சொன்னேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, வாழ்க்கைப் புள்ளி அடிப்படையில் பென்ஷனை மாற்றுவது நியாயமானது என்று இந்த அரசு கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வாழ்க்கைப் புள்ளி என்பது மாறக்கூடியது. பென்ஷன் என்பது நிரந்தரமாக அவர்களுடைய சம்பள அடிப்படையில் கொடுக்கப்படுவது. அப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர், சார். பென்ஷன் வாங்குகிறவர்கள் மாதா மாதம் தங்களுடைய அலுவலகத்திற்குச் சென்று வாங்குவதை நிறுத்தி, பென்ஷன் தொகையை அவர்களுக்கு மணி ஆர்டர் மூலமாக அனுப்புவதற்கு அரசு முற்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது யோசிக்கப்பட வேண்டிய விஷயம்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, வாழ்க்கைப் புள்ளியின் அடிப்படையில் பென்ஷனை உயர்த்தாவிட்டாலும், பென்ஷன் தொகை நீண்ட காலத்திற்கு முன்னதாக நிர்ணயிக்கப்பட்டது என்பதை அனுசரித்து, அதை ஒட்டு மொத்தமாக ஏதாவது சிறிதளவு உயர்த்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நீண்ட காலத்திற்கு முன்பே நிர்ணயிக்கப்படவில்லை. 1960-ம் வருடத்திற்குப் பிறகு திருத்தப்பட்ட சம்பள விகிதத்தின்படி இந்த அகவிலைப்படியும் சேர்க்கப்பட்ட காரணத்தால் இப்பொழுது இன்னும் உயர்த்த வேண்டிய அவசியம் ஒன்றும் ஏற்படவில்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டில் ஓய்வு ஊதியம் பெறுபவர்களின் மொத்த எண்ணிக்கை என்ன ? அவர்களுக்காக அரசாங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு எவ்வளவு செலவு ஆகிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தனிக் கேள்வி போட்டால் தகவல் கொடுக்கலாம்.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : மேல் மட்டத்தில் உள்ளவர்களுக்குப் பென்ஷனை அதிகப்படுத்த முடியாது என்றாலும், அடிமட்டத்தில் இருக்கின்ற ஓய்வு பெற்ற அரசுப் பணி ஊழியர்களுக்கு ஓரளவாவது அதிகப் படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நியாயமான அளவில் இப்பொழுது கொடுக்கப்படுகிறது என்பது தான் அரசாங்கத்தினுடைய கருத்து.

திரு. ஏ. சி. நரசிம்மன் : 1960-ம் ஆண்டுக்கு முன் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஒரு பென்ஷனும், 1960-ம் ஆண்டுக்குப் பிறகு ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு அதிகமான பென்ஷனும் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அந்த வித்தியாசத்தை நீக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதுபற்றி விவரம் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், பென்ஷன் என்பது நீண்ட நாள் சேவை செய்ததற்குப் பின் வயது முதிர்ந்த நேரத்தில் நிம்மதியாக வாழ்வதற்காக அளிக்கப்படுகிற ஒரு உதவியாகும். அந்த உதவி, அவர்கள் வயதான காலத்தில் சிறிது வசதியாக இல்லாவிட்டாலும், குறைந்தபட்ச தேவையையாவது நிறைவேற்றிக் கொள்ளுகின்ற முறையிலே உயர்த்தப்படுமா ?

மாண்மிபுகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுது அதற்குரிய முயற்சிகள் எடுக்கப்பட்ட முறையில் தான் பென்ஷன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

Thiru K. VINAYAKAM : If financial stringency is the cause for refusing the demand for increasing their pension in tune with the cost of living index and the ruling prices in the State, will the Government think of the possibility of increasing their pension by a slab or a slight percentage, even though they could not increase it to the full extent of their demand ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : திரும்பத் திரும்ப அதையே நான் சொல்லிக்கொண்டு வருகிறேன். அகவிலைப்படியை இன்னும் சிறிது அதிகப் படுத்த வேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கை. இன்றைக்கு இருக்கும் நம்முடைய சம்பள நிர்ணய முறையில் எந்த உதவி கொடுக்க வேண்டுமோ அது கொடுக்கப்பட்டு வருகிறது என்பது தான் அரசாங்கத்தினுடைய தெளிவான கொள்கையாகும்.